# கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சு

## நெல் சந்தைப்படுத்தல் சபை

**கூறுவிலை கோரல்**

**அநுராதபுரம், மாத்தளை, புத்தளம், கம்பஹா மற்றும் குருணாகல் மாவட்டங்களுக்குச் சொந்தமான, நெல் சந்தைப்படுத்தல் சபையிடமுள்ள 15,000 மெற்றிக் டொன் நெல்லை கூறுவிலை கோரல்களை அழைப்பதன் மூலம் விற்பனை செய்தல்**

| துண்டு இலக்கம் | கூறுவிலை கோரல் இலக்கம் |
|---|---|
| 03 | PMB/2026/NP/003 |

மேற்குறிப்பிட்ட கூறுவிலை கோரல்களுக்காக, நெல் சந்தைப்படுத்தல் சபைக்குச் சொந்தமான அநுராதபுரம், மாத்தளை, புத்தளம், கம்பஹா மற்றும் குருணாகல் ஆகிய மாவட்டங்களிலுள்ள நெல் களஞ்சியசாலைகளில் உள்ள 15,000 மெற்றிக் டொன் நெல்லை விற்பனை செய்வதற்காக, கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சின் உயர்மட்டப் பெறுகைக் குழுவின் தலைவரினால் 2026 ஆம் ஆண்டுக்காகப் பதிவுசெய்யப்பட்ட நெல் ஆலை உரிமையாளர்களிடமிருந்து பொறியிடப்பட்ட கூறுவிலை கோரல்கள் அழைக்கப்படுகின்றன.

| துண்டு இலக்கம் | கூறுவிலை கோரல் இலக்கம் | கூறுவிலை கோரலின் பெயர் மற்றும் நிலையம் | களஞ்சியசாலை அமைந்துள்ள மாவட்டம் | வெள்ளை நாட்டு நெல்லின் அளவு (மெற்றிக் டொன்) | சிவப்பு நாட்டு நெல்லின் அளவு (மெற்றிக் டொன்) |
|---|---|---|---|---|---|
| 03 | PMB/2026/NP/003 | அநுராதபுரம், மாத்தளை, புத்தளம், கம்பஹா மற்றும் குருணாகல் மாவட்டங்களுக்குச் சொந்தமான, நெல் | அநுராதபுரம் | 11,848.187 | 485.513 |
| | | | மாத்தளை | 74.008 | - |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | சந்தைப்படுத்தல் சபையிடமுள்ள 15,000 மெற்றிக் டொன் நெல்லை கூறுவிலை கோரல்களை அழைப்பதன் மூலம் விற்பனை செய்தல் | புத்தளம் | 2,142.726 | - |
| | | | கம்பஹா | 54.918 | 0.733 |
| | | | குருணாகல் | 368.961 | 24.954 |

1) கூறுவிலை கோரல்களை சமர்ப்பிக்கும் ஒப்பந்தக்காரர், நெல் சந்தைப்படுத்தல் சபையில் 2026 ஆம் ஆண்டுக்காகப் பதிவுசெய்யப்பட்ட ஒரு நெல் ஆலை உரிமையாளராக இருத்தல் வேண்டும்.

2) அந்தந்தக் களஞ்சியசாலைகளில் விற்பனைக்கு உத்தேசிக்கப்பட்டுள்ள நெல் இருப்பை முழுமையாகவோ, அல்லது குறைந்தபட்சம் 10 மெற்றிக் டொன் அல்லது அதிகபட்சம் 15,000 மெற்றிக் டொன் வரையான மட்டுப்பாட்டுக்கு உட்பட்டதாகவோ கொள்வனவு செய்ய முடியும்.

3) இந்தக் கூறுவிலை கோரல் தொடர்பான அனைத்து விபரங்களையும் மற்றும் கேள்வி ஆவணங்களையும் நெல் சந்தைப்படுத்தல் சபையின் தலைமை அலுவலகத்திலிருந்தும் (0112-335414) மற்றும் கீழே குறிப்பிடப்பட்டுள்ள பிராந்திய அலுவலகங்களிலிருந்தும் பெற்றுக் கொள்ள முடியும்.

| **பிராந்திய அலுவலகத்தின் பெயர்** | **தொலைபேசி இலக்கம்** |
|---|---|
| வட பிராந்திய அலுவலகம் | 021 – 2060 913 |
| அம்பாறை பிராந்திய அலுவலகம் | 063 – 2224 870 |
| தென் பிராந்திய அலுவலகம் | 047 – 2225 514 |
| கிழக்கு பிராந்திய அலுவலகம் | 026 – 2226 691 |
| பொலன்னறுவை பிராந்திய அலுவலகம் | 027 – 2222 407 |
| வடமேல் பிராந்திய அலுவலகம் | 037 – 2260 628 |
| அனுராதபுர பிராந்திய அலுவலகம் | 021 – 2060 913 |

4) மேலே குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டதன் பின்னர், நெல் சந்தைப்படுத்தல் சபையின் மேலே குறிப்பிடப்பட்டுள்ள தலைமை அலுவலகத்தில் / பிராந்திய அலுவலகங்களில் இருந்து 2026.07.24 ஆம் திகதி வரை வார நாட்களில் முற்பகல் 09.00 மணி முதல் பிற்பகல் 03.00 மணி வரை மீளளிக்க முடியாத ரூ. 3,500.00 செலுத்தி கேள்வி ஆவணங்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.

5) கூறுவிலை கோரல்களை சமர்ப்பிக்கும் போது, ஒரு மெற்றிக் டொன்னுக்கு ரூ. 1,300.00 வீதம், கொள்வனவு செய்ய உத்தேசித்துள்ள நெல் மெற்றிக் டொன் அளவுக்கு ஏற்பக் கணிக்கப்படும் பிணைமுறி உத்தரவாதத்தை, இலங்கை மத்திய வங்கியில் பதிவுசெய்யப்பட்ட ஒரு வர்த்தக வங்கியிடமிருந்து பெற்று அல்லது மீளப்பெறக்கூடிய பண வைப்பாக/வங்கி வரைபு நெல் சந்தைப்படுத்தல் சபையின் கீழே குறிப்பிடப்பட்டுள்ள கணக்கு இலக்கத்தில் வைப்பிலிடப்பட்டு பெற்றுக்கொள்ளப்பட்ட பற்றுச்சீட்டின் புகைப்படப் பிரதியை சமர்ப்பித்தல் வேண்டும்.

பணம் வைப்பிலிடப்பட வேண்டிய வங்கிக் கணக்கு பற்றிய விபரம்
வங்கிக் கணக்கு இலக்கம் - 6662403
வங்கிக் கணக்கை வைத்திருப்பவரின் பெயர் - நெல் சந்தைப்படுத்தல் சபை
வங்கி - இலங்கை வங்கி
கிளை - ராஜகிரிய

6) தற்போதுள்ள நெல் இருப்புகளின் பௌதீக நிலையை 2026.07.06 ஆம் திகதி முதல் 2026.07.20 ஆம் திகதி வரை மு.ப 09:00 முதல் பி.ப 04:00 வரை கடமை நேரங்களில் நேரில் பார்வையிட்டுப் பரிசோதித்து கொள்ள முடியும்.

7) இது தொடர்பான மேலதிக விபரங்களை, கீழே குறிப்பிடப்பட்டுள்ள தொலைபேசி இலக்கங்கள் மூலம் நெல் சந்தைப்படுத்தல் சபையின் தலைவர் அல்லது பிரதிப் பொது முகாமையாளர் (செயற்பாடுகள்) ஆகியோரைத் தொடர்புகொண்டு அறிந்துகொள்ள முடியும்.

| <u>முகவரி</u> | <u>தொலைபேசி இலக்கம்</u> |
|---|---|
| தலைவர்<br>நெல் சந்தைப்படுத்தல் சபை<br>6-வது மாடி, நிவாச மகலேக்கம் கட்டிடம்,<br>சேர் சிற்றம்பழம் ஏ கார்டினர் மாவத்தை,<br>கொழும்பு 02. | 0112-335414<br>மின்னஞ்சல் –<br>pmbgeneralmanager@gmail.com |

8) உரிய முறையில் பூர்த்தி செய்யப்பட்டு பொறியிடப்பட்ட கூறுவிலை கோரல் ஆவணங்கள் 2026.07.27 ஆம் திகதி மு.ப 11.00 மணிக்கு முன்னர், கீழே குறிப்பிடப்பட்டுள்ள முகவரியிலுள்ள கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சின் முதலாவது மாடியில் அமைந்துள்ள பெறுகை முகாமைத்துவப் பிரிவில் இதற்கென வைக்கப்பட்டுள்ள கூறுவிலை கோரல் பெட்டியில் இடப்பட வேண்டும் அல்லது குறிப்பிட்ட திகதிக்கும் மற்றும் நேரத்திற்கும் முன்னர் கிடைக்கும் வகையில் பதிவுத் தபாலில் அனுப்பிவைக்கப்படவும் வேண்டும். கூறுவிலை

கோரல்மனுக்கள் இடப்படும் உறையின் இடதுபக்க மேல் மூலையில் “நெல் சந்தைப்படுத்தல் சபைக்குச் சொந்தமான 2026 ஆம் ஆண்டிற்கான நெல் இருப்புகளை விற்பனை செய்தல் - PMB/2026/NP/003” எனக் குறிப்பிடப்பட வேண்டும். 2026.07.27 ஆம் திகதி மு.ப 11.00 மணிக்கு பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

தலைவர்,
உயர் மட்டப் பெறுகைக் குழு,
கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சு,
இலக்கம் 80/5,
“கொவிஜன மந்திரய”,
ரஜமல்வத்தை வீதி ,
பத்தரமுல்ல.

9) கூறுவிலை கோரல்கள் திறப்பு 2026.07.27 ஆம் திகதி மு.ப 11.15 மணிக்கு கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சின் முதலாவது மாடியில் உள்ள கேட்போர் கூடத்தில் நடைபெறும். இதில் ஒப்பந்தக்காரர் அல்லது அவரது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதி ஒருவர் கலந்துகொள்ள முடியும்.

10) ஓர் கூறுவிலை கோரலையோ, அனைத்து கூறுவிலை கோரல்களையுமோ அல்லது ஓர் கூறுவிலை கோரலின் ஒரு பகுதியையோ நிராகரிக்கும் உரிமை உள்ளிட்ட அனைத்து விடயங்கள் தொடர்பிலான இறுதித் தீர்மானத்தை எடுக்கும் அதிகாரம் உயர்மட்டக் பெறுகைக் குழுவிற்கு உண்டு.

தலைவர்,
உயர் மட்டப் பெறுகைக் குழு,
கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சு,
இலக்கம் 80/5,
“கொவிஜன மந்திரய”,
ரஜமல்வத்தை வீதி ,
பத்தரமுல்ல.
2026.07.06